இணைப்பு I

(392 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

அறிவிப்புகள், 2010–2011

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

1. சென்னையில் திருமங்கலம் மற்றும் ஷெனாய் நகர் பகுதிகளில் உள்ள பழைய தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மீண்டும் கட்டுதல்.

சென்னையில் திருமங்கலம் மற்றும் ஷெனாய் நகர் பகுதிகளில் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள 446 அரசு அலுவலர் குடியிருப்புகள் மிகவும் பழைமையாகவும், பெரிய அளவில் பழுதுபார்க்கும் தேவை உடையதாகவும் உள்ளன. அத்தகைய அனைத்து குடியிருப்புகளையும் இடித்துவிட்டு ஏற்புடைய கூடுதல் தரைப்பரப்புக் குறியீடுகளுடன் கூடிய குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் மீண்டும் கட்டப்படும். பொது மக்களுக்காக வீடுகள் கட்டுவதுடன், அரசு அலுவலர்களுக்கான குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை 892 ஆக உயர்த்தப்படும். இத்திட்டத்திற்கான மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ.180.43 கோடியாக இருக்கும்.

2. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்பு வீடுகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுதல்.

கோயம்புத்தூரில் ரேஸ் கோர்ஸ் காலனி, மாவட்ட வன அலுவலர் வளாகம், கண்காணிப்புப் பொறியாளர்/காவல் துறைக் கண்காணிப்பாளர் வளாகம், கவுண்டம்பாளையம், காந்திபுரம், உப்பிலிபாளையம் மற்றும் சீரநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில்

[2010 ஏப்ரல் 22

உள்ள அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புத் திட்டத்தில் உள்ள 1,642 வீடுகள் 1974 ஆம் ஆண்டு முதல் 1985 வரையிலான காலத்தில் கட்டப்பட்டவை என்பதால் உடனடியாக பெரிய அளவில் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. கூடுதல் வசதியும் ஏற்புடைய தரைப்பரப்புக் குறியீடுகளுடன் அந்த குடியிருப்புகள் அனைத்தும் மீண்டும் கட்டப்படும். இத்தகைய பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவதன்மூலம் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தின்கீழான குடியிருப்புகள் எண்ணிக்கை 2,000 ஆகும். அதே நேரத்தில் தவணை முறை விற்பனைத் திட்டத்தின்கீழ் ரூ. 430.53 கோடி திட்ட மதிப்பிலான கூடுதல் வீடுகள் கட்டப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படும்.

3. கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளக்கிணறு என்ற இடத்தில் ஒரு விரிவான வீட்டு வசதித் திட்டம் உருவாக்குதல்.

கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளக்கிணறு என்ற இடத்தில் 180.77 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு விரிவான வீட்டு வசதித் திட்டம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், பசுமையான நிலப்பரப்பு அளித்தல் மற்றும் சுகமான வாழ்க்கை வசதிகளுடன் கூடிய பொது மக்கள் வாங்கத்தக்க விலையில் வீடுகள் அளிக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்புத் துறை

1. இரண்டாம் முழுமைத் திட்டத்தின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி பகுதிக்குள் வில்லிவாக்கம் மற்றும் வேளச்சேரி ஆகிய பகுதிகளுக்கும், சென்னைப் பெருநகரின் இதர பகுதிகளான அம்பத்தூர், நசரத்பேட்டை மற்றும் பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி 2010-2011 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். இப்பகுதிகளுக்காகத் தயாரிக்கப்படும் விரிவான திட்டங்கள் அப்பகுதிவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தேவையான வசதிகளைத் திட்டமிட்டு அளிக்க வழிகாட்டியாக அமையும்.

2010 ஏப்ரல் 22]

2. சென்னைப் பெருநகரில் பாரம்பரியமிக்க சிறப்புக் கட்டடங்கள் அதிகமாக உள்ளன. சென்னைப் பெருநகர் வளர்ச்சி விதிகளின்கீழ் வரலாற்று புராதன, கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த கலை நயமிக்க கட்டடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பட்டியலை அறிவிப்புச் செய்து அவற்றைப் பாதுகாக்கும் பணி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும்.

3. சென்னைப் பெருநகரப் பகுதியில் பெருகிவரும் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 100 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் உரிமையாளர்களுடன் (Public Private Partnership) இணைந்து வீட்டுமனை மற்றும் வீடுகளை உருவாக்கும் திட்டம் வருங்காலங்களில் செயல்படுத்தப்படும்.

4. சென்னை கோயம்பேடு ஒப்பந்த சொகுசுப் பேருந்து நிலையத்தின் மேல்தளங்களை வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தவும், பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை பொதுத் துறை மற்றும் தனியார் பங்களிப்புமூலம் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

5. இரண்டாவது முழுமைத் திட்டத்தின்படி கருணாகரச்சேரி மற்றும் அன்னம்பேடு கிராமத்தில் வெளிவட்டச் சாலையை ஒட்டி சரக்குந்து வாகனங்களுக்கான முனையம் ஒன்றினை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. பள்ளிப்பாளையம், ஒட்டன்சத்திரம், புஞ்சைபுளியம்பட்டி, நரசிங்கபுரம் மற்றும் அன்னூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளில் புவியியல் தகவல் தொழில்நுட்ப முறையில் (GIS–Geo Informatics System) புதிய முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

7. சென்னை நீலாங்கரை முதல் புதுச்சேரி வரை கிழக்கு கடற்கரைச் சாலையின் இருபுறங்களிலும் அமைந்துள்ள பகுதிகளில், கட்டடத் திட்ட அனுமதி மற்றும் மனைப் பிரிவுகளுக்கான அனுமதிகளை வழங்குவதற்கும், பல்வேறு விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கவும் தனியாக ஒரு மண்டல திட்டக் குழுமம் அமைக்கப்படும்.

[2010 ஏப்ரல் 22

8. சிவகாசி, காரைக்குடி, உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய பகுதிகளில் கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் உருவாக்கப்படும்.

9. கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய உள்ளூர் திட்டப் பகுதிகள் விரிவாக்கம் செய்யப்படும்.

10. கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தூத்துக்குடி, வேலூர் மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு திட்ட அனுமதி பரிசீலனை மற்றும் வரைபடங்கள் கூர்ந்தாய்வு செய்தல் போன்றவை புதிய தொழில்நுட்பங்களின்மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

11. கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தூத்துக்குடி, வேலூர் மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளில் உள்ள திட்டக் குழுமங்களின் நடவடிக்கைகளை பொது மக்கள் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ளும் வகையில் இணையதளங்கள் உருவாக்கப்படும்.

12. சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் நான்கு குடியிருப்புகள் அல்லது 4000 சதுர அடிகளுக்குள் கட்டப்படும் கட்டடங்களுக்கு திட்ட அனுமதி வழங்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

2010-2015 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது நிதிக் குழு மானியத்தைப் பயன்படுத்தி ரூ. 300 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் ஏற்கெனவே உள்ள குடிசைப் பகுதிகளுக்கான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அவற்றிற்கான இடங்களைத் தெரிவு செய்தல், திட்ட மதிப்பீடுகள் தயாரித்தல், ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் முதலான, தேவையான ஆரம்ப கட்டப் பணிகள் 2010-2011 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்.